[20th January 1961

Heart disease

*10 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இருதய நோயைப் போக்க மருந்து தயாரிக்கும் திட்டம் உண்டா?

(இ) அப்படியானால் அதன் விவரமென்ன?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri S. M. ANNAMALAI : ஸார், நாளுக்கு நாள் இருதய நோயினால் அதிகமான மக்கள் சாகிறார்கள். அதற்குக் காரணம் என்ன? அதைப் போக்குவது எப்படி என்று சர்க்கார் ஏதாவது யோசனை செய்திருக்கிறார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : இதில் இரண்டுவிதம் இருக்கிறது. ஒன்று உடம்பைச் சார்ந்தது. இன்னொன்று மனத்தைச் சார்ந்தது. உடம்பைச் சார்ந்ததற்கு மருந்து இருக்கிறது. மன வியாதிக்கு வேறு விதம்.

Sri A. A. RASHEED : May I know whether there is any proposal to manufacture drugs to alleviate the heartbroken?

The Hon. Sri M. A. MANICKAVELU : I think the hon. Member himself is somewhat expert in that line.

Pakkam tank

* 11 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள்ளிவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் தாலுகா, பாக்கம் ஏரி, மராமத்து செய்யும் விஷயம் எந்த நிலையில் உள்ளது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : An estimate amounting to Rs. 6,000 for clearing silt in Pakkam tank supply channel and an estimate amounting to Rs. 7,300 for shifting the off-take point of the channel have been approved by the Executive Engineer, Public Works Department, Vellore, and the Superintending Engineer, Madras Circle, respectively under the Special Minor Irrigation Progamme. The works will be taken up for execution shortly.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி தரக்கூடிய இந்த ஏரி பல வருஷ காலமாக மராமத்து செய்யப்படாத காரணத்தினால் சென்ற ஆண்டில் உடைந்து ஊரையெல்லாம் பாழ்படுத்திற்று. இவ்வாண்டு மழை பெய்தும்கூட அந்த ஏரிக்கே தண்ணீர் வர